நகல்

228

No. 41. Coral Merchant Street,
B. T. Madras 2nd. January 1906.

தமிழ் நூலாசிரியிற் றலைசிறந்த ஐய,

புதுவருடப் பிறப்பன்று புதிதாய்
க் கௌரவம் பெற்றருள் தாங்களும் ஒரு
வராய் நின்றமைக்கு மிகவும் சந்தோஷிக்
கின்றேன். இந்தியா கவர்ன் மெண்டார்
தங்களது அறிவின் மாட்சிமையையும் தா
ங்கள் தமிழ் மாட்டுக் கொள்ளும் ஊக்
கத்தையும் உற்சாகத்தையும் உள்ள
வாறே உணர்ந்து மெய்ச்சித் தாங்
கட்கு "மஹாமஹோபாத்தியாயர்" என
ன்று கௌரவப்பட்டந் தந்தருளினர்.
இது நான் நெருநன் மாலை இவ்வூரில்
வெளியாகும் இந்தியன் பேட்ரியட்
என்னும் ஆங்கிலத் தினசரிப் பத்திரி
கையின் அதிபரோடுரையாடிக் கொண்
டிருக்கையில் அவராற் கேள்வியுற்றே
ன். அளவிலானந்த மடைந்தேன்.
வீண் சொல் லாரவாரங் காட்டித் தாங்
தோன்றிகளாய்த் தாமும் உத்தமப் புல
வரேபோல் தருக்கித் திரியும் போலிப்
புலவரிருக்க உண்மையிற் கல்வி நலஞ்
சான்ற தங்கட்கித் தக்கதே யாகுமிது.
தமிழில் புலவர் பலரிருந்தனர். இருக்
கின்றனர். இவ்வாறு அரசினரால்

நகல்

(ஆங்கில அரசினரால்) கௌரவப் பட்
டமளிக்கப் பெற்றவர் தாங்களே. இத்
தன்மை காணிற் றங்களை முதல்வராய
ணிர். இதனை நோக்க என் சந்தோ
ஷம் பன்னுமதிகரிக்கின்றது. புகழி
ன் செக்கையிற் பொலிவுறாவுந் தங்
கட்கு இறைவனின்னருள் சுரப்பதாக.
புது வருஷப்பிறப்பின் கௌரவமில
ரான தங்களைக் காணுமவாவினேன்.
நிறுப்படம்
தங்களை நோக்கி வருவேன். அதுவும்
இன்று பகற் போதுக்கு மேலேதானி
ருக்கும். தங்களுடைய தரிசனம் தந்
தருளும்படி பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் பாலன்புள்ள,
சொக்கலிங்கம்.
குன்றூர்.

ஊர்வாட்டு வந்திருக்கின்றமையின்
வந்துள்ள ஊரும் புதிதாயிருக்கின்றமை
யின் சுசரியான எழுது கருவிகள் கிடைத்
தில. இயற்கை நற்குணத்தால் க்ஷமித்
தருளுக.

நகல்

ட. பக்.

XXVI

சொக்கலிங்கம், சென்னை.
2-1-1906.

page 576 to 577.

F 194-196

(9).